செ.வெ.——115 24.02.2007

# இந்திய ஒற்றுமையும் வலிமையும் உறுதிப்பட; இறுதித் தீர்வு நதிகளின் இணைப்பு ஒன்றே ஆகும்!

வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு இரண்டாவது கட்டமாக அரசின் உதவித் தொகை வழங்குகின்ற விழா மற்றும் தகவல் தொழில் நுட்பப் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டுகின்ற விழா, அத்துடன் புதிய வளர்ச்சிப் பணிகளைத் தொடங்கி வைத்து, அரசின் நலத் திட்ட உதவிகளை வழங்குகின்ற விழா – இத்தனை விழாக்களும் இணைந்த பெரு விழா இன்று மாபெரும் திருவிழாவாக கோவை மாநகரத்தில் நடைபெற்றுக் கொண் டிருக்கின்றது.

இந்தக் காலை நேரத்தில் இவ்வளவு பெரிய கூட்டம் என்று தம்பி துரைமுருகன் வியந்து பேசினார். அவருக்கு இருந்த மகிழ்ச்சியில் நேரம் காலையா, பிற்பகலா என்று கூடத் தெரியாமலே காலை நேரம் என்று சொன்னார். இது காலை நேரம் அல்ல, பகல் 12 மணி. நடுப்பகலில் இங்கே பல்லாயிரக்கணக்கிலே – பார்வைக்கு இலட்சக்கணக்கிலே என்று சொல்லத் தக்க அளவிற்கு தமிழ்ப் பெருமக்கள் கூடி நின்று இந்த அரசின் திட்டங்களை வரவேற்று வழங்குகின்ற உற்சாகத்தால், மேலும் முனைப்போடு நாங்கள் பணியாற்ற எங்களைத் தட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்ற அந்த மகிழ்ச்சியோடு தான் உங்கள் முன்னால் நாங்கள் எங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்து வைத்துக் கொண்டிருக்கின்றோம்.

வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு ஒரு தொகை – நிறைவான தொகை அல்ல – முழுமையான அளவிலே அல்ல – இந்த அரசால் இயன்ற

அளவிற்கு வழங்கக் கூடிய தொகையை வழங்குகின்ற நிகழ்ச்சி இப்போது கோவையில் இரண்டாவது கட்டமாக நடைபெறுகிறது.

இந்த திட்டத்தை திருச்சியிலே நான் தொடங்கி வைத்தேன். இது இரண்டாவது கட்டம். திருச்சியிலே இந்த திட்டத்தை நான் தொடங்கி வைத்தபோது அறிவிக்கப்பட்டது; எஸ்.எஸ்.எல்.சி. அதாவது பத்தாம் வகுப்பு தேர்ச்சிப் பெற்று வேலையற்று இருப்பவர்களுக்கு 150 ரூபாய் வீதமும் +2 அல்லது மேல்நிலைக் கல்வியிலே தேர்ச்சி பெற்றவர்களுக்கு 200 ரூபாய் வீதமும், இளங்கலைப் பட்டதாரி, முதுநிலைப் பட்டதாரி படித்துவிட்டு வேலையற்று இருப்போர்களுக்கு 300 ரூபாய் வீதமும் உதவித் தொகை வழங்கும் திட்டம் 11.11.2006 அன்று திருச்சியிலே தொடங்கி வைக்கப்பட்டது.

அப்படி வழங்கியபோது முதல் கட்டமாக 11.11.2006 அன்று திருச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நான் தொடங்கி வைத்தேன். திருச்சியிலே நான் தொடங்கி வைக்க நம்முடைய அமைச்சர் பெருமக்களெல்லாம் ஒவ்வொரு நகரத்திலும் அதே நாளில் தொடங்கி வைத்து அந்த ஒரே நாளில் தமிழகம் முழுவதும் உள்ள எல்லா மாவட்டங்களிலும் அமைச்சர்களால் வழங்கப்பட்டு, இந்தத் திட்டத்தின் மூலமாக முதற்கட்டமாக 2 லட்சத்து 6 ஆயிரத்து 766 பேர்களுக்கு – வேலை வாய்ப்பில்லாமல் இருந்தவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது.

இன்றைக்கு இரண்டாவது கட்டம். கோவையில் நான் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்கிற நேரத்தில்; முதற்கட்டத்திலே நிதி உதவி செய்யப்பட்ட 2 லட்சத்து 6 ஆயிரம் பேர்களை அன்னியில், இரண்டாவது கட்டத்தில் மேலும் கூடுதலாக மாநிலம் முழுவதிலுமாக 1 லட்சத்து 3 ஆயிரத்து 629 பேருக்கு தற்போது உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஆக இரண்டு கட்டத்திலும் சேர்த்து மொத்தம் 3 லட்சத்து 10 ஆயிரத்து 395 பேருக்கு இந்த உதவித் தொகை இனி மாதந்தோறும் வழங்கப்படும்.

முதல் கட்டமாக உதவித் தொகை 12 கோடியே 30 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. 2–வது கட்டமாக தற்போது முதலில் வழங்கப்பட்டவர்களுக்கும், தற்போது மேலும் சேர்க்கப்பட்டவர்களுக்கும் சேர்த்து உதவித் தொகை 18 கோடியே 43 லட்சம் ரூபாய் மாநிலம் முழுவதும் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற தொகையாகும். ஆக மொத்தம் இந்த இரண்டு கட்டத்திலுமாக படித்து விட்டு வேலைவாய்ப்பில்லாத இளைஞர்களுக்காக வழங்கப்பட்டுள்ள தொகை 30 கோடியே 73 லட்சம் ரூபாய் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இந்த உதவித் தொகையை 3 மாதத்திற்கு ஒருமுறை சேர்த்து வேலைவாய்ப்பில்லாமல் இருக்கிறவர்களுக்கு உதவித் தொகையை கொடுத்து விடுவதால் அவர்களுக்கெல்லாம் வேலை கிடைத்தாக அர்த்தமா என்றால் இல்லை. ஓர் ஆறுதல், முழுமகிழ்ச்சி வழங்குகின்ற அரசுக்கும் இல்லை. பெறுகின்ற இளைஞர்களுக்கும் இல்லை. ஆனால் ஒரு ஆறுதல் ஒரு அளவிற்கு ஒரு மனதிருப்தி. பரவாயில்லை என்ற ஒரு நம்பிக்கை– வேலைகிடைக்கின்ற வரையில் உதவித் தொகை கிடைக்கும் என்ற ஒரு நம்பிக்கை ஊட்டத்தான் அவர்களுக்கு இந்த தொகை வழங்கப்படுகிறது. அதேநேரத்தில் நான் எண்ணிக்கொண்டிருக்கின்றேன். வருகின்ற வரவு செலவு திட்டத்தில் அல்லது எதிர்காலத்திலே எப்பொழுது முடிகிறதோ அப்பொழுது திட்டக்குழு உறுப்பினர்களோடு கலந்து பேசி அமைச்சர்களோடு கலந்து பேசி, இந்த வேலைவாய்ப்பற்று இருக்கின்றவர்கள் இந்த உதவித் தொகையைப் பெற்றால் மட்டும் போதாது; அவர்கள் எத்தகைய வேலைக்கு தங்களை தயார் படுத்திக் கொள்ள வேண்டும் என்ற அந்தப் பயிற்சியும் அவர்களுக்கு அளிக்கின்ற முனைப்பான முயற்சியை அரசு எடுக்க வேண்டும் என்று நான் கருதிக் கொண்டிருக்கின்றேன். அதற்கான நல்ல அறிவிப்பும் விரைவிலே வரும். வரக்கூடும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. அந்த

நம்பிக்கையை அந்த இளைஞர்களுக்கெல்லாம் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த திட்டத்தை மாத்திரமல்லாமல், இன்றைக்கு இந்த நகரத்தில் நடைபெறுகின்ற இந்த விழாவில் அடிக்கல் நாட்டியிருக்கின்றோம், நலத்திட்ட உதவிகளை வழங்கியிருக்கின்றோம். 731 கோடி ரூபாய்க்கு 188 பணிகளுக்கு அடிக்கல் இன்றைக்கு நாட்டப்பட்டிருக்கின்றது.

41 கோடியே 53 லட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டப்பணிகள் இன்றைக்கு திறந்து வைக்கப்பட்டிருகின்றன. 35 ஆயிரத்து 409 பயனாளிகளுக்கு பல்வேறு துறைகளின் கீழ் 17 கோடியே 31 லட்சத்து 9 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

ஆக, இந்த ஒரு நாள் விழாவில் 790 கோடியே 22 லட்ச ரூபாய் மதிப்பிலான பல்வேறு பணிகள் கோவை மாவட்டத்தில் செயலாக்கம் பெறுகின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

டைடல் பூங்கா பற்றி இங்கே பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். டைடல் பூங்கா என்று ஒரு பூங்காவுக்கு பெயரல்ல. டைடல் பூங்கா என்பது சென்னையில் இருக்கின்ற பூங்காவிற்குத்தான் பெயர். ஏன் அது டைடல் பூங்கா என்று குறிப்பிட்டோம் என்றால் அந்த காரணத்தை விளக்கிச் சொல்லிவிடுவது நல்லது என்று கருதுகின்றேன். சென்னையில் அமைக்கப்பட்ட அந்த தொழில் பூங்கா. அதில் எல்காட் நிறுவனத்தினுடைய பங்கு 50 சதவீதம். டிட்கோ நிறுவனத்தினுடைய பங்கு 40 சதவீதம். டிட்கோ, எல்காட் இரண்டும் சேர்ந்ததுதான் டைடல் பூங்கா. சென்னையில் இருக்கின்ற டைடல் பூங்கா போல ஒவ்வொரு நகரத்திலும், கோவை, மதுரை, சேலம், திருச்சி, நெல்லை போன்ற இந்த மாவட்டத்தினுடைய தலைநகரங்களில் பூங்காக்களைத் தான் அமைக்கமுடியுமே தவிர, அமைக்கின்ற பூங்காக்களை டைடல் பூங்கா என்று நாங்கள் சொல்ல முடியாது. நீங்கள் சொல்லிக்

கொண்டால் டைடல் பூங்கா மாதிரி என்று அதற்கு பெயரிட வேண்டுமே தவிர டைடல் பூங்கா என்று பெயரிடுவது தவறு. டைடல் பூங்கா மாதிரி, கோவையில் டைடல் பூங்கா மாதிரி ஒன்று அமைகிறது. இதைத் தொடர்ந்து மதுரையிலும் இது அமையும். அதைத் தொடர்ந்து நெல்லையிலும், சேலத்திலும், திருச்சியிலும் அமையும். டைடல் பூங்கா மாதிரி – ஆனால் அந்தந்த பூங்காக்கள் தனித்தனி பெயரிலேதான் அழைக்கப்படும் என்பதை நான் இங்கே தெளிவாக்க கடமைப்பட் டிருக்கின்றேன்.

இந்த டைடல் பூங்காவை இங்கே கோவையிலே அமைக்கின்ற நேரத்தில் தம்பி தயாநிதி மாறன் சுட்டிக் காட்டியதைப் போல், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை தாராளமாக வாரி வாரி வழங்கக்கூடிய சூழ்நிலை இனிமேல் ஏற்படும் என்பது மகிழ்ச்சிகரமான செய்திதான். இந்த மகிழ்ச்சிகரமான செய்தியை இன்றைக்கு நாம் பெறுவதற்கு காரணம் இந்த பூங்காதான். இந்த பூங்கா பல நகரங்களில் அமைத்து கோவை நகரத்திலே மருத்துவக் கல்லூரி வளாகத்திலே 29 ஏக்கர் நிலப்பரப்பில் தொழில் நுட்ப துறையில் சிறப்பு பொருளாதார மண்டலத்தை நாம் நிறுவுகின்ற வகையில் எப்படி ஒரு முயற்சி எடுக்கப்பட்டது என்றால் 15.6.2006 அன்று நானும் தயாநிதிமாறனும், நம்முடைய அரசு அலுவலர்களும், தொழில் துறை நண்பர்களும், பெங்களூருக்கு சென்று அங்கே இருக்கின்ற விப்ரோ மற்றும் இன்போசிஸ் நிறுவனத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டோம். அப்படி பார்வையிட்டதன் அடிப்படையில் மென்பொருள் தொழில் நுட்ப பூங்கா நிறுவனமும் அதாவது சாப்ட்வேர் டெக்னாலஜிஸ் பார்க் ஆப் இந்தியா, (எஸ்.டி.பி.ஐ.) இணைந்து சென்னையில் உள்ள பூங்காபோன்ற ஒரு அமைப்பை கோவையிலே உருவாக்குவது என்ற முடிவுக்கு வந்தோம். 23.2.2006 அன்று தமிழக சட்டபேரவையில் தகவல் தொழில் நுட்பவியல் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் போது தமிழக அரசும் மத்திய அரசின் மென்பொருள் தொழில்

நுட்ப பூங்காக்கள் நிறுவனமும், தனியார் துறை இணைந்து கோவையிலே தகவல் தொழில் நுட்ப பூங்கா ஒன்றை நிறுவும் என்று அறிவிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாகத்தான் இன்றைக்கு இந்த விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இங்கே புகழ் வாய்ந்த தகவல் தொழில்நுட்ப நிறுவனர்களான விப்ரோ நிறுவனத்திற்கு 10 ஏக்கர் நிலமும் டாடா கன்சல்டன்சி நிறுவனத்திற்கு 5 ஏக்கர் நிலமும் 8.9.2006 அன்று வழங்கப்பட்டுள்ளன. மீதம் உள்ள நிலப்பகுதியில் 10 ஏக்கர் பரப்பில் சென்னை டைடல் பூங்காவைப் போல கோவை டைடல் பூங்காவை அமைக்க தமிழக அரசு முடிவு செய்தது. கோவை டைடல் பூங்காவிற்குரிய மாதிரி வரைப்படம் 8.9.2006 அன்று சென்னையில் நடைபெற்ற கனக்ட் 2006 நிகழ்ச்சியிலே திறந்து வைக்கப்பட்டது. அதன்படி இதற்குரிய கட்டிடம் 10 லட்சம் சதுர அடிகளை கொண்டதாக கட்டப்பட உள்ளது. இந்த கட்டுமான பணி 2008 ஆம் ஆண்டில் முடிவடையும் என்பதையும் மொத்தம் 300 கோடி ரூபாய் முதலீட்டில் அமைகின்ற கோவை டைடல் பூங்கா 10 ஆயிரம் இளைஞர்களுக்கு நேரடியாக வேலைவாய்ப்பை வழங்கும். 2 ஆயிரம் இளைஞர்களுக்கு மறைமுகமாக வேலைவாய்ப்பை வழங்கும் என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு உங்களுக்கு அறிவிக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

எனவே, கோவை போல மற்ற மாநகரங்களிலும் இப்படிப்பட்ட பூங்காக்களை அமைத்து தமிழகத்தை தொழில் வளம் மிக்க ஒரு மாநிலமாக உருவாக்கி, வேலை யில்லாதவர்களே கிடையாதென்ற ஒரு சூழ்நிலையை நிச்சயமாக நம்மால் ஏற்படுத்த முடியும். ஏற்படுத்துவதற்குரிய அந்த நம்பிக்கையை உங்களுடைய ஆர்வத்தையும், நம்முடைய அதிகாரிகள் காட்டுகின்ற ஊக்கத்தையும் உணர்வையும் வெளிநாடுகளிலே இருக்கின்ற தொழில் அதிபர்கள் எல்லாம் தமிழ்நாட்டிற்குச் சென்றால், அமைதியான முறையில் தொழில் நடத்தலாம் என்ற நம்பிக்கையோடு வந்து கொண்டிருக்கிறார்களே,

அந்த நிகழ்ச்சிகளையும் காணுகின்ற நேரத்தில் இன்றைக்கு கூட நான் இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள்.

4000 கோடி ரூபாய்க்கு இந்த எட்டு மாத காலத்தில் தொழிற்சாலைகளுக்கான முதலீடு தமிழ் நாட்டிற்கு வந்திருக்கிறது என்று சொன்னார்களே, நாளைக்கு நான் சென்னைக்கு சென்றால், இன்னொரு 4 ஆயிரம் கோடி ரூபாய்க்கான முதலீட்டில் மற்றொரு முக்கியமான தொழிற்சாலை வரவிருக்கின்றது என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவிக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

**சேலத்திலே இருந்து ஒரு ரெயில்வே கோட்டம் அமைவதைப் பற்றி நம்முடைய நண்பர் சுப்பராயன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அந்த ரயில்வே கோட்டம் அமைவதற்கு எத்தகைய முயற்சிகளை நாம் எடுத்துக் கொண்டோம் என்பதெல்லாம் பலருக்கு ஞாபகம் இருக்காது. ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு தேவகவுடா அவர்கள் இந்தியப் பிரதமராக இருந்த போது சேலத்திற்கு ஒரு விழாவிற்கு வந்திருந்தார். அந்த விழாவில் சேலம் மாவட்டக் கழகத்தின் செயலாளர் தம்பி வீரபாண்டி ஆறுமுகம் சேலத்திலே ரயில்வே கோட்டம் அமைய வேண்டும், அதை பிரதமரிடம் வலியுறுத்துங்கள் என்று என்னிடம் கேட்டுக் கொண்டார். நானும் அந்த விழாவிலே கலந்து கொண்ட காரணத்தால், பேசும்போது அதை வலியுறுத்திப் பேசினேன். ஆனால் தேவகவுடா, அது தரப்படும் என்று சொன்னார், பரிசீலிக்கப்படும் என்று சொன்னார், வழங்கப்படும் என்று கூட உறுதியளித்தார். ஆனால் தேவ கவுடா கர்நாடகா மாநிலத்தைச் சேர்ந்தவர் என்பது உங்களுக்குத் தெரியும். வழங்கப்படும் என்று சொல்வதெல்லாம் சட்டப்படி கூட வழங்கப்படுவதில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் அப்போது சேலம் கோட்டம் வழங்கப் படவில்லை.**

அப்போது அளிக்கப்பட்ட உறுதிமொழி காற்றிலே பறந்து போய் இப்போது இந்த ஆட்சியில் நம்முடைய பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் ஆட்சியில், திருமதி சோனியா காந்தி அவர்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவியாக இருந்து வழி நடத்துகின்ற இந்த ஆட்சியில் நாம் விரும்பியவண்ணம் சேலம் கோட்டம் அமைக்கப்பட்டது. அதற்கு என்னுடைய அருமை நண்பரும், மத்திய ரயில்வே துறை அமைச்சருமான லல்லு பிரசாத் யாதவ் அவர்கள் இணக்கம் தெரிவித்தார்கள். அதற்கு உறுதுணையாக இருந்து ரயில்வே துறை இணை அமைச்சர் நண்பர் வேலு அவர்களும் அதற்கான பணிகளை ஆற்றினார்கள். அந்தக் கோட்டம் அறிவிக்கப்பட்டு, அதற்கான விளம்பரங் கள் எல்லாம் செய்யப்பட்டு, அலுவலகப் பலகை வரையிலே மாட்டப்பட்ட பிறகு, இப்போது அந்தக் கோட்டம் சேலத்திலே வருவதற்கான வழியில்லாமல் கதவு களை அடைப்பதற்கு சிலபேர் முயற்சிக்கின்றார்கள் என்றாலுங்கூட, கதவை உடைப்பது குற்றமென்றாலுங்கூட, நிச்சயமாக கதவைத் திறந்து கொண்டு அந்தக் கோட்டம் சேலத்திலே உதயமாகும் (கைதட்டல்) அது கோவைக்கும் பயன் படும், யார் யார் அதற்காக தங்களுடைய ஆர்வத்தை வெளிப்படுத்தியிருக் கிறார்களோ, யார் யார் தங்களுடைய உணர்வுகளை எடுத்துக் காட்டியிருக் கிறார்களோ அந்த உணர்வுகளுக்கு வெற்றி கிடைக்கும் (கைதட்டல்) என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய சுப்பராயன் அவர்களும், தங்கம் அவர்களும், கோவிந்தசாமி அவர்களும் மற்ற நண்பர்களும் குறிப்பிட்டதைப் போல் தமிழ்நாடு தான் இன்றைக்கு, இப்படிப்பட்ட சோதனைகளுக்கெல்லாம் ஆளாகிக் கொண்டிருக்கின்றது. இப்படிப்பட்ட சோதனைகள் என்று நான் குறிப்பிடுவது, நான் தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்திலும் சொன்னேன், முதலமைச்சர்கள் கூடிய மாநாட்டிலும் சொன்னேன், நம்முடைய திட்டக் குழு கூட்டத்திலும் டெல்லியிலே பேசும்போது குறிப்பிட்டேன்.

தமிழ் நாடு ஏறத்தாழ ஒரு தீபகற்பம் போல இருக்கின்றது. ஒரு பக்கத்திலே கர்நாடகம், இன்னொரு பக்கத்திலே ஆந்திரா, இன்னொரு பக்கத்திலே கேரளம். அவர்களுக்கும் நமக்கும் பகை இல்லை. பகை வரக் கூடாது என்று கருதுகிறவன் நான். பகை வளர்வதற்கான ஒரு புகை கூட எழக் கூடாது என்று எண்ணுகின்றவன் நான். அந்த மாநில மக்களோடு சகோதரர்களாக வாழவேண்டுமென்று கருதுகின்றவன் நான்.

இங்கே கூட நம்முடைய பொன்முடி பேசும்போது குறிப்பிட்டார். தயாநிதி மாறன் ஒரு ரூபாய்ச் செலவில் கோடிக்கணக்கான இதயங்களை யெல்லாம் தொலை பேசி மூலம் இணைத்து வைத்திருக்கிறார் என்று குறிப்பிட்டார். கோடிக் கணக் கான இதயங்களை அவர் இப்போது இணைக்கவில்லை. உண்மையிலேயே கோடிக்கணக்கான காதுகளைத் தான் இணைத்திருக்கின்றார், டெலிபோன் மூலம். காதுகளை இணைத்தால் மாத்திரம் போதாது, கருத்துக்களையும் இணைக்க வேண்டும். அது தயாநிதி மாறன் செய்கின்ற வேலை அல்ல. நான் செய்கின்ற வேலை அல்ல. யாரும் செய்கின்ற வேலை அல்ல. அந்தந்த மாநில மக்கள் அதைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். எல்லோரும் சேர்ந்து, இந்தியா ஒரு நாடு – நம்முடைய நாடு என்று பேசுகிறோம். ஆனால் தமிழகம் தண்ணீரின்றி தவித்தால் தர மறுக்கிறோம். தமிழகத்தின் தேவைகளை தரக் கூடாது, தர முடியாது என்று தீர்மானம் கொண்டு வருகின்றோம். வன்முறையிலே கூட ஈடுபடுகின்ற நிலைமை இன்றைக்கு இந்தியாவிலே இருக்கின்றது. இதை இனியும் பொறுத்துக் கொண்டு யாரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது.

வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாதென்றால், தடுக்க வேண்டியவர்கள் தடுக்க வேண்டும். இவைகளையெல்லாம் சமாளித்து, ஒரு

அமைதியான நிலைமையை உருவாக்க வேண்டியவர்கள், அதற்கு முன் வர வேண்டும். இன்றைக்குக் கூட பத்திரிகைகளிலே பார்த்திருப்பீர்கள்.

காவிரிக்கு ஒரு நடுவர் மன்றம் அமைக்கப்பட்டு, அது ஒரு இறுதித் தீர்வை வழங்கியிருக்கின்றது. அந்த இறுதித் தீர்வு தமிழகத்திற்கு முழுமை யான மகிழ்ச்சியைத் தரக் கூடியதல்ல. ஆனால் துயரத்தைத் தரக் கூடியதும் அல்ல. அதைப் போல கர்நாடகத்திற்கு சில குறைகள் இருக்கலாம். ஆனால் நிரம்ப குறைகள் இருப்பதைப் போல அவர்கள் ”பாவலா” காட்டிக் கொண்டு, தமிழர்கள் மீது சீறிப் பாய்கின்ற ஒரு நிலைமை இருக்கின்றது.

அவர்கள் இன்றைக்கு பாராளுமன்றம் வரையிலே அதை எடுத்துச் சென்று வாதாடுவோம் என்று சொல்கிறார்கள் என்றால், நடுவர் மன்றத் தீர்ப்பு 16 ஆண்டு காலமாகக் காத்திருந்து இன்றைக்குக் கிடைத்திருக்கின்ற ஒரு தீர்ப்பாகும். அந்தத் தீர்ப்பு தமிழ்நாட்டிற்கு எல்லா பிரிவுகளிலும் நன்மையைச் செய்து விடவில்லை. நமக்கும் சாதகங்கள் இருக்கின்றன, பாதகங்களும் இருக்கின்றன. அந்தப் பாதகங்களைச் சுட்டிக்காட்டி இதையெல்லாம் சரி செய்து கொடுங்கள் என்று நாம் கேட்கவிருக்கிறோம். அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே அதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியும் இருக்கிறோம். அதைப் போல கர்நாடகத்திற்கு சில பாதகங்கள் இருந்தால் அவர்கள் அதைச் சுட்டிக் காட்டி அதை நிறைவு செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளலாம். அதை விட்டு விட்டு வன்முறையிலே ஈடுபட்டு, இரு மாநிலங்களுக்கிடையே நிரந்தரமான பகையை உருவாக்குவது இந்திய ஒற்றுமைக்கு, இந்திய ஒருமைப் பாட்டிற்கு, இறையாண்மைக்கு நல்லதல்ல என்பதை நாம் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதை இந்த விழாவிலே சுட்டிக் காட்டுவதை விட வேறிடம் வேறு காலம் பொருத்தமாகத் தெரியவில்லை.

ஏனென்றால் மிக மிக முக்கியமான தருணத்தில், மிக மிக முக்கியமான நேரத்தில் இதை நான் வேண்டுகோளாக மாத்திரமல்ல,

இந்தியப் பேரரசுக்கு, இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பாற்ற நீங்கள் எடுக்க வேண்டிய முயற்சிக்கு – நீங்கள் ஆற்றிட வேண்டிய ஆக்கப் பணிக்கு இதை ஒரு எச்சரிக்கையாகக் கருத வேண்டுமென்று நான் இந்தியப் பேரரசை கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நான் தான் அனுபவிப்பேன், மற்றவர்களைப் பட்டினி போடுவேன், மற்ற மாநிலங்களுக்கு தண்ணீர் தர மாட்டேன் என்று கூறுகின்ற அளவிற்கு ஒரு மாநிலம் வருமேயானால், அந்த மாநில மக்கள் இந்தியர்கள் அல்லவா ? இது வரையிலே இந்தியர்கள் என்று அவர்களை இணைத்துக் கொண்டு யாராவது நாடகம் ஆடினீர்களா ? என்று கேட்க மாட்டாமோ ? ஆகவே இன்றைக்கு தமிழ்நாட்டிற்கு என்று இருக்கின்ற நெருக்கடிகளை நாம் நம்முடைய அமைதி யான போராட்ட முறைகளால் களைய வேண்டும். அதைத் தான் இங்கே பேசிய சுப்பராயன் சொல்லும்போது சொன்னார் – இந்த நெருக்கடிகளை யெல்லாம் தீர்க்கக் கூடியவர் கருணாநிதி தான் என்று சொன்னார். ஒருவரை நம்பி ஒன்றும் செய்ய முடியாது. எல்லோரும் கருணாநிதிகளாக இருக்க வேண்டும். எல்லோரும் கருணாநிதியின் உள்ளங்களைப் பெற்றாக வேண்டும். ஒரு தனி கருணாநிதியால் எல்லாம் செய்து விட முடியாது. என்னை வேண்டுமானால் நீங்கள் ஆயுதமாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். என்னை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். ஆனால் நாம் நம்முடைய தமிழகத்தின் நலன்களை – நம்முடைய காலத்திலேயே விட்டுக் கொடுத்து விட முடியாது. அதனால் தான் சொல்கிறேன். எல்லா பக்கம் இருந்தும் நமக்கு இன்றைக்கு பல இடையூறுகள் – பல தடைகள் இருந்து கொண்டே இருக்கின்றன.

அந்தத் தடைகளைத் தகர்க்க நாம் நம்முடைய ஒற்றுமையை நிலை நாட்ட வேண்டும். நமக்குள்ளே இருக்கின்ற சங்கடங்களை – சலிப்புகளை – சச்சரவுகளை – மன பேதங்களை – பிளவுகளை நாம்

நீக்கிக் கொள்ள வேண்டும். நாம் உள்ளத்தால் ஒருவரே, உடலினால் பலராய்க் காண்போம் என்றாரே பாரதிதாசன், அதைப் போல இங்கே வீற்றிருக்கும் அத்தனை பேரும் பல உடல்களுக்குச் சொந்தக்காரர்கள் – ஆனால் எல்லோரும் தமிழர்கள் என்கின்ற அந்த உணர்வைப் பெற்றால் தான் நாம் தமிழர்கள் என்ற உணர்வைப் பெற்று தெலுங்கர்களோடோ, அல்லது கன்னடியர்களோடோ, மலையாளிகளோடோ சண்டைக்குப் போக வேண்டும் என்பதற்காக அல்ல – இங்கே தமிழர்கள், அங்கே கன்னடியர்கள், அங்கே தெலுங்கர்கள், அங்கே மலையாளிகள் – எல்லோரும் இந்தியர்கள் – இந்தியாவிற்குக் கிடைக்கக் கூடிய இயற்கை வளங்களை அனைவரும் பங்கிட்டுக் கொள்வோம். அப்படி பங்கிட்டுக் கொள்வதற்கு இருக்கின்ற ஒரேயொரு சாத்தியக் கூறு இந்தத் தண்ணீர் சண்டை ஓய வேண்டுமே யானால் தண்ணீர் சண்டை என்பது பரம்பரை பரம்பரையாக நம்முடைய பட்டிக் காட்டு குக்கிராமங்களிலே கூட வாய்க்கால் வரப்பு சண்டை தான் – மடையை ஒரு மண்வெட்டியால் திருப்பி தன் வயலுக்கு தண்ணீரைப் பாய்ச்சிக் கொண்டாலே, தலை கீழே விழும், ஆள் தீர்த்துக் கட்டப்படுவான். அப்படி தண்ணீர் சண்டையில் அவ்வளவு உணர்ச்சி உண்டு. ஆகவே ஒரு மாநிலத் திற்கு மாநிலம் ஏற்படுகின்ற தண்ணீர் சண்டையால் இந்தியாவின் பலத்தை நாம் குறைத்துக் கொள்ளக் கூடாது. அந்தச் சண்டை வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதை நாமே தீர்த்துக் கொள்ள நாம் எல்லோரும் தமிழர்கள், மலையாளிகள், கன்னடியர், தெலுங்கர் என்று தனித்தனியாகப் பிரித்து நம்முடைய உரிமைகளுக்காகப் போராடுகின்ற அதே நேரத்தில் எல்லோரும் இந்தியர்கள், நமக்குக் கிடைக்கின்ற இயற்கை வளத்தை பங்கிட்டுக் கொள் வோம். காவேரி ஆறு என்ன தரையிலா பிறந்து நமக்கு தண்ணீர் கொடுக்கிறது, இல்லை. காவேரி ஆறு ஆனாலும், வைகை ஆனாலும், தாமிரபரணி ஆனாலும், பெரியாறு ஆனாலும், முல்லைப் பெரியாறு

ஆனாலும், ஏன் கங்கை ஆனாலும், கோதாவரி ஆனாலும் எந்த ஆறு ஆனாலும் எல்லா ஆறுகளும் கடலிலே இருந்து ஆவியாக வானுக்குச் சென்று, கீழே வந்த ஆறுகள் தான். வானம் நமக்கு வழங்கிய கொடை தான் இந்த ஆறுகள் எல்லாம்.

ஆகவே அவை பொதுவானவை தான். அந்தப் பொதுவான இயற்கை யினுடைய கொடையை நியாயமாக நாம் பிரித்துக் கொள்ள வேண்டும். நாம் எல்லோரும் இந்திய மக்கள் என்று இதுவரையிலே நீங்கள் சொன்ன போது, அதை தட்டிக் கேட்டவர் களுக்கெல்லாம் சொன்ன பதில் என்ன ? நாமெல்லாம் இந்தியர்கள் அல்லவா ? நாம் பிரிந்து போகலாமா ? என்று பிரிந்து போக வேண்டுமென்று கூறியவர்களுக்கெல்லாம் புத்திமதி கூறியவர்களே, உங்களைக் கேட்கிறேன், நீங்கள் பிரிந்து போகச் சொல்கிறீர்களா ? எங்களுக்குத் தண்ணீர் தர மாட்டோம் என்று சொல்லி எங்களுக்கு உரிய உரிமைகளைத் தர மாட்டோம், என்று சொல்லி எங்களோடு வாழாதே, பிரிந்து போ என்று சொல்கிறீர்களா ? நாங்கள் பிரிந்து போகத் தயாராக இல்லை. நாங்கள் பிரிந்து போகக் கூடாது என்று தான் எங்கள் தலைவர் அண்ணா தலைமையிலே இந்தியா ஒரே நாடு, ஒற்றுமையைக் காப்பாற்றுவோம், இறையாண்மையை ஏற்றிப் போற்றுவோம் என்று உறுதியெடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி தமிழகத்திலே நடைபெறுகிறது. அந்த ஆட்சிக்கு உறுதுணையாக இருக்கின்ற தோழமைக் கட்சிகளுடைய தோழர் கள் எல்லாம், தலைவர்கள் எல்லாம் இங்கே தங்களுடைய கருத்துக்களை யெல்லாம் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அனைவரும் சேர்ந்து முழக்க மிடுவோம். நாமெல்லாம் இந்தியர்கள் – இயற்கையை நாம் பங்கிட்டுக் கொள்வோம் – இயற்கை எங்களுக்குத் தான் சொந்தம் என்று ஒருவர் வாதாடினால், மற்றவர்களைப் பட்டினி போடுகின்ற அந்த ஆபத்தை

உருவாக்கக் கூடாது, அது இந்தியாவிற்கே நல்லதல்ல என்ற அந்த உணர்வைப் பெற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த உணர்வைப் பெறுகின்ற நிலை நமக்கு வந்தாக வேண்டும். அதற்கு உறு துணையாக நம்முடைய இந்திய அரசு, மத்திய அரசு இப்போது ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடியில் தலையிட வேண்டும். இன்று ஏற்பட்டி ருக்கின்ற நெருக்கடி என்ன என்பதை நான் இரண்டை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

ஒன்று, இலங்கை நெருக்கடி அதைப் பற்றி அறிக்கையில் தெரிவித்துள்ளேன். – மற்றொன்று பிற மாநிலங்களுடைய நெருக்கடி. பிற மாநிலங்களின் நெருக்கடி என்றால் கர்நாடகம் நடுவர் மன்றத் தீர்ப்பைக் கூட மதிக்காமல், நாங்கள் புரட்சி செய்வோம், நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று கூறுவது சரியா ? எல்லோரும் சேர்ந்து நடுவர் மன்றம் அமை யுங்கள் என்று கேட்டு, அப்படி வைக்கப்பட்ட நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பைக் கூட மதிக்க மாட்டோம் என்று கர்நாடகம் இன்றைக்கு பிடிவாதம் செய்கின்றது.

உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பையே உதறித் தள்ளுவோம், உடைத் தெறிவோம் என்று முல்லைப் பெரியாறு விஷயத்தில் கேரளம் நம்மை இழிவு படுத்துகின்றது. நம்முடைய உரிமைகளைப் பறித்துக் கொண்டிருக்கின்றது. இங்கே கர்நாடகம் இந்தப் பணியைச் செய்கின்றது. இது போதாதென்று டெல்லி பட்டினம் வரையிலே நாடாளுமன்றம் வரையிலே சென்று அங்கே ஒரு தீர்மானத்தைக் கொடுத்து விவாதிக்கப் போகிறோம் என்றும் சொல்லப் படுகிறது. நேற்றையதினம் ஆஸ்திரேலியாவிற்கு அரசு அழைப்பின் பேரில் செல்ல வேண்டிய தம்பி துரைமுருகன் அந்தப் பயணத்தை ஒத்திப் போட்ட தற்குக் காரணம் – இன்று என்னோடு வந்திருப்பதற்குக் காரணம் – நாளைய தினம் பாராளுமன்றத்திலே இந்த நடுவர் மன்றத் தீர்ப்பைப் பற்றிய பிரச்சினை வந்தால், நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவ்வாறு

நடந்து கொள்வது, எப்படி இந்தக் கருத்துக்களைச் சொல்வது, எப்படி இந்தப் பிரச்சினையை அணுகுவது என்ற விவரங்களை யெல்லாம் அவர்கள் புரிந்து கொள்ள நாளைக்கே அவர் டெல்லி சென்று, நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களை யெல்லாம் அழைத்து, அவர்கள் முன்னிலையில் நம்முடைய பாராளுமன்ற கட்சித் தலைவர் டி.ஆர். பாலு முன்னிலையில் நம்முடைய தயாநிதி போன்றவர்கள் எல்லாம் அங்கே இருக்க அந்தச் சூழ்நிலையிலே இந்தப் பிரச்சினையை எப்படிச் சந்திப்பது என்பதை விவாதிப்பதற்காகத் தான் ஆஸ்திரேலியா பயணத்தைக் கூட ஒத்தி வைத்து விட்டு, டெல்லிக்குச் செல் என்று சொல்லியிருக்கிறேன்.

காரணம், தேவ கவுடா போன்றவர்களே, இந்தியாவின் பிரதமராக இருந்தவர்களே, மாநில ஒற்றுமைக்கு விரோதமாக இன்றைக்கு செயல் படு கின்ற ஒரு தீர்ப்பை உதறி தள்ளுகின்ற நிலைமைக்கு வந்திருக்கின்ற போது, வேறு என்ன செய்ய முடியும் ? இதை மத்திய சர்க்கார், மன்மோகன் சிங், சோனியா காந்தி போன்றவர்கள் உடனடியாக தலையிட்டு ஒரு சுமூகமான சூழ்நிலையை உருவாக்கினால் தான் தமிழகம் கேரளம் கர்நாடகம் ஆந்திரம் ஏன் பஞ்சாப் வரையிலே சொல்லுகிறேன் – எல்லா மாநிலங்களும் இந்தியா விற்குள் இருக்கின்ற மாநிலங்கள் – ஒவ்வொரு மாநிலமும் சகோதர மாநிலங் கள் – அங்கெல்லாம் வாழ்கின்றவர்கள் அத்தனை பேரும் நம்முடைய சகோதரர்கள் – அந்தச் சகோதரர்களுக்கிடையே யுத்தம் கூடாது – சகோதர யுத்தத்தைத் தவிர்க்க வேண்டும் – சகோதரர்கள் அனைவரும் இந்தியர்கள் என்ற முறையிலே வாழ வேண்டும்.

அதற்கு நதி நீர் பிரச்சினை காரணமாக இருக்கக் கூடாது. இந்தப் பிரச்சினை இன்றல்ல, நெடுநாளைக்கு, நீண்ட காலத்திற்கு வராமல் இருப்பதற்கு ஒரே வழியை திராவிட முன்னேற்றக் கழகம் பல ஆண்டுகளாக எடுத்துக் கூறி வருகிறது. அண்மையிலே கூட நான் முதலமைச்சர்கள்

மாநாட்டிலே அதை வலியுறுத்தியிருக்கிறேன். அது தான் நதிகளை இணைப்பது தான். எல்லா நதிகளும் இணைக்கப்படுமேயானால் – இணைக்கப்பட்ட நதிகள் ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்குமேயானால் இணைக்கப்படுகின்ற நதிகளுக்கு மேலும் தண்ணீரை வழங்கக் கூடிய நதி கள் வந்து சேரக் கூடிய சூழ்நிலையும் விஞ்ஞான உதவியுடன் உருவாக்கப் படுமே யானால் இந்தப் பிரச்சினை தீரும். ஆகவே நதிகள் இணைப்பு தான் முக்கியம் – நீங்கள் வேறு யாரையும் பிறகு இணைக்கலாம் – தயாநிதி மாறன் காதுகளை இணைப்பது இருக்கட்டும், இதயங்களை இணைப்பது இருக்கட்டும் – முதலில் இந்திய மக்களுடைய உணர்வுகளை இணையுங்கள். நான் தயாநிதிக்காகச் சொல்லவில்லை, எனக்காகவும் சொல்லிக் கொள்கிறேன். சோனியா காந்திக்காகவும் சொல்லிக் கொள் கிறேன். மன்மோகன் சிங்கிற்காகவும் சொல்லிக் கொள்கிறேன். என்னுடைய பழைய நண்பர் தேவ கவுடாவிற்காகவும் சொல்லிக் கொள் கிறேன். முதலில் நதிகளை இணைப்பதற்கு முன் வாருங்கள். அதற்கு உங்கள் விருப்பத்தைத் தெரிவியுங்கள். அதற்கு ஆதரவு தாருங்கள். நதிகளை இணைத்தால் நாடு உருப்படும். நதிகளை இணைத்தால் நாட்டின் ஒற்றுமை ஓங்கும். நதிகளை இணைத்தால் நம்முடைய பலம் கண்டு பல வல்லரசுகளே நடுங்கும். ஆகவே நதிகள் இணைப்புத் தான் இந்தியாவின் ஒற்றுமைக்கு ஒரே வழி. இடையிலே எவ்வளவு போராட்டங்கள் – உண்ணா விரதங்கள் – பேரணிகள் நடத்தினாலும் பயன் இல்லை. ஆகவே நதிகளின் இணைப்பை உடனடியாக, அவசர அவசரமாக, விரைவாக நிறைவேற்ற முன் வர வேண்டுமென்று மத்திய அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்காக ஒரு பெரிய மாநாட்டை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அகில இந்திய அளவிலே கூட விரைவில் நாம் நடத்தவிருக்கிறோம்

**என்பதையும் குறிப்பிட்டு இந்த அளவில் உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்கிறேன்.**